நல்லூர் பிர. நூலகம்

Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2025    தை 09    (22-01-1994)    சனிக்கிழமை    ஓசை 338

## யாழ். மாவட்ட ஆசிரியர் வெற்றிடம் நிரப்புமாறு கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் 2117 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளதாகவும் இவற்றை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் யாழ். மாவட்ட கல்வி அலுவலகம் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக கல்வி அமைச்சைக் கேட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் தற்போது 6449 அரசாங்க ஆசிரியர்களும் 471 தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர், மேலும் 97 பட்டதாரி ஆசிரியர்களும் 2020 பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுமாக 2117 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர். இதில் ஆரம்ப ஆசிரியர்கள் 875 பேரும் ஆங்கில ஆசிரியர்கள் 460 பேரும், கணித ஆசிரியர்கள் 109 பேரும், சித்திர ஆசிரியர்கள் 103 பேருக்குமான (4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே. கவுடன் இணைய பிரேமச்சந்திரா முடிவு

## காமினி திஸநாயக்காவும் இணைவாராம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளரும், வடமேல் மாகாண முதலமைச்சருமான ஜீ. எம். பிரேமச்சந்திரா தான் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்ள முடிவுசெய்துள்ளதாக தெரிவித்துள்ளார். கட்சியின் தலைவர் காமினி திசநாயக்காவும் ஐக்கியதேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாக சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் மேலும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து எதிர்காலத்தில் செயற்படுவது மிகுந்த சிரமமான காரியம். எனவே எமது கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளது என மேலும் அவர் தெரிவித்தார்.

நான்கு தினங்களுக்குமுன் இதுகுறித்து வெளிவந்த செய்தியை அவர் மறுத்தபோதும் இன்று தாமும்தமது கட்சியில் பலரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது எனத் தீர்மானித்துள்ளதாக சந்தேசியவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்காவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையத்திட்டமிட்டுள்ளதால் இது கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு இல்லையென்றும் கட்சிகள் இரண்டும் ஒன்றுசேருவதையே இது காட்டுவதாகவும் அவர் கூறினார்,

## ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி ஐ. தே. கட்சியுடன் இணையவில்லை

### லலித் குழுவினர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் குழுவினர் கட்சியின் செயலாளர் ஜி. எம் பிரேமச்சந்திரா ஐ.தே. கவுடன் இணைய எடுத்த முடிவைக் கண்டித்துள்ளனர். கட்சி ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதென முடிவெடுக்கவில்லை வேண்டுமாயின் பிரேமச்சந்திராவும், காமினியும் இணைந்து கொள்ளட்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து கொள்வதற்கு லலித் குழுவினர் முன்பிருந்தே எதிர்ப்பு தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரு குழுக்களுக்கிடையிலுள்ள முரண்பாட்டையடுத்து கட்சி பிளவுபடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மலேரியா நோயினால் சிறுமி மரணம்

நம்பாவ பஸ் குண்டுவெடிப்பு

## சோதனையிடத் தவறியதாக 16 பொலிசார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

நம்பாவ பொலிஸ் நிலையமருகே இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பை விசாரணை செய்துவரும் பொலிஸ் புலன் விசாரணைக் குழுவினர் 16 பொலிசாரை வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்துள்ளனர்.

அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய கடமையைச் சரிவரச் செய்யவில்லை என குற்றம் சாட்டப்பட்டே இந்த 16 பொலிசாரும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அனுராதபுர பொலிஸ் அதிகாரி எஸ். பிரேமரட்ணா தெரிவித்தார்.

இந்தபஸ்வண்டி போகாயகசந்தி, மதவாச்சி சந்தி ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொலிஸ் காவல் நிலையங்களில் சோதனையிடப்படாது அனுப்பப்பட்டமையே இவர்களின் இடைநிறுத்தத்திற்கு காரணமாகும். இவ் இடங்களில் பஸ் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டிருப்பின் குண்டுவெடிப்பைத் தவிர்த்திருக்கமுடியும் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இடை நிறுத்தம் செய்யப்பட்ட மேற்படி 16 பொலிசாரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## குண்டு வெடித்தபோது பஸ் உயர தூக்கி வீசப்பட்டது

நம்பாவ குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து அரசதரப்பிலிருந்து இதுவரை எந்த அறிக்கையும் வெளியிடப்படவில்லை என்றபோதிலும் பஸ்ஸின் பாதுகாப்பில் கவனக்குறைவே இக்குண்டு வெடிப்பிற்கு காரணம் என இராணுவ அதிகாரிகள் கூறினர். சிறிலங்கா படைகள் தங்கியுள்ள பல முகாம்கள் இப்பகுதியில் உள்ளன எனவும் ஆனால் பல பொலிஸ் நிலையங்களுடாக சென்ற இந்த பஸ் சோதனையிடப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை,

குண்டு வெடித்தபோது பஸ் உயர தூக்கி எறியப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழருக்கு உரிமை வழங்குவதை தடுக்கப் புதிய இயக்கம்

### தினேஷ் குணவர்த்தனா ஆரம்பிக்கிறார்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு மேலதிகமாக எந்தவிதமான உரிமைகளும் வழங்கக் கூடாது என வலியுறுத்தும் மற்றுமோர் இனவாதக் கொள்கையுடைய அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் எம்.பியுமான தினேஷ் குணவர்த்தனா இவ்வமைப்பை உருவாக்குவதில் முயற்சிகள்மேற்கொண்டுவருகிறார்.

தமிழருக்கு மேலதிகமாக எந்த உரிமையும் வழங்கக் கூடாது என்பதே இவ்வமைப்பு உருவாக்கப்படுவதன் முக்கிய நோக்கம் என இவ் வமைப்பிற்குத்தலைமைவகிக்கும் தினேஷ் குணவர்த்தனா கூறினார். இந்த அமைப்பில் பேராசிரியர்கள், நீதிபதிகள் எம். பிகள் ஆகியோர் இடம் பெறுவர். அத்துடன் சகல சிங்கள இனவாத அமைப்புக்களும் இதில் இணைத்துக் கொள்ளப்படும்.

## இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு

மேல் மாகாண சபையில்

## இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு அதிரடிப்படை செல்லத் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளினுள் விசேட அதிரடிப்படையினர் செல்லக் கூடாது என இராணுவத்தினர் அதிரடிப்படையினருக்கு எச்சரித்துள்ளனர். இதனால் சிறிலங்கா இராணுவம் முற்றாக வெளியேறிய பின்னரே அப்பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் தமது நிலைகளை அமைத்துக் கொள்கின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு டெரிய கல்லாறுபகுதியில் விசேட அதிரடிப்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர் மட்டு- கல்முனை வீதியில் இது அமைந்துள்ளது மார்ச்சில் நடத்த உத்தேசித்துள்ள உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டே இப்புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இம் முகாமில் வாகனங்கள் கடும் சோதனைக்குள்ளாகி வருகின்றன.

## தமிழக மீனவர்மீது சூடு இந்திய தூதரகம் ஆட்சேபம்

(டில்லி)

இலங்கையின் கடல் எல்லையினுள் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலுக்கு கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் மூலம் இந்திய அரசு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. கடந்த திங்களன்று நடைபெற்ற இத்தாக்குதலில் தமிழக மீனவர் ஒருவர் பலியானது தெரிந்ததே.

இச் சம்பவத்தில் காயமடைந்த ஏனைய நான்கு மீனவர்கள் இந்தியாவுக்கு அனுப்புவதற்காக இந்திய தூதரகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி நிர்வாக உத்தியோகத்தர் பெருமளவில் பற்றாக்குறை

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில் பிரதேச மட்டத்திலான கல்விச் சீரமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும்அதனை சிறந்த முறையில் வழிநடத்துவதற்கு போதிய கல்வி நிர்வாக உத்தியோகத்தர்கள் இல்லாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்மாவட்டத்தில் 65 கல்வி உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக தற்போது 19 பேர் மட்டுமேயுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ii ஐச் சேர்ந்தவர்களில் 8 பேருக்கும் தரம் iii இல் 18 பேருக்கும் விசேட பாடங்களுக்கான இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் iii ஐச் சேர்ந்தவர்களில் 20 பேருக்குமான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் இவற்றை உடனடியாக நிரப்புமாறு கோரி இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர் சங்கம் கல்வி செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. (ச, சி)

## தொழில்நுட்ப கல்லூரியின் கல்வி ஆண்டு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

1992-93 கல்வியாண்டிற்கு யாழ் தொழில் நுட்பக்கல்லூரிக்கு மேலும் குறிப்பிட்ட தொகுதி மாணவர்களை சேர்த்துக்கொள்ளவிருக்கிறது. இதனால் புதிய கல்வியாண்டு முன்னர் குறிப்பிட்ட திகதியில் ஆரம்பமாக மாட்டாது என யாழ் தொழில் நுட்பகல்லூரி அதிபர் க. ஜெயரட்ணம் நேற்றுத் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்து பதிவினை மேற்கொள்ளாத மாணவர்களின் இடத்திற்கு புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் அடுத்த கல்வியாண்டு பின்வரும் திகதிகளில் இடம் பெறுமென

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா அரசிற்கெதிராக நம்பிக்கையில்லாதீர்மானம்

(கொழும்பு)

மேல்மாகாண சபையில் சந்திரிகா குமாரணதுங்க ஆட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர மேல்மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தயாராகி வருவதாக ஜனநாயக ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் சுசில் குலதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் சமர்ப்பிக்கப்படுவதற்காக இரகசியமான முறையில் இந்நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஜனநாயக ஐக்கிய முன்னணியின்காமினி, பிரேமச்சந்திரா குழுக்களில் பலரைத் தம்பக்கம் இழுக்க ஐக்கிய தேசியக் கட்சியினர் முயன்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்

## சிறிலங்காதொழிலாளருக்கு தென்கொரியாவில்தொழில்

(கொழும்பு)

சிறிலங்கா தொழிலாளர்களுக்கு தென் கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்று தர முயற்சிகள் செய்யப்போவதாக சிறிலங்கா தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கான 10,000 தொழிலாளரை கொண்ட முதல் அணி இந்த ஆண்டு நடுப்பகுதியில் புறப்படும் என்றும், இதற்கான பேச்சுக்கள் தற்போது கொழும்பில் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதுகொழும்புக்கு வந்துள்ள தென்கொரிய தொழில் அதிபர்கள் சிலர் இதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தொழிலாளர்களுக்கு இது தொடர்பாக வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகத்தில் பயிற்சிஅளிக்கப்பட விசேட ஏற்பாடு செய்யப்பட உள்ளதாகவும்மேலும் அவர் தெரிவித்தார்,

சென்ற வருடம் சிறிலங்காவிற்கு 3000 கோடி ரூபா அந்நிய செலாவணி வெளிநாடுகளில் தொழில் செய்யும் இலங்கையர்களினால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதுவே இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணி வருவாயில் ஆகக் கூடியது என்றும், எனவே இது மேலும் பன்முகப்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தெற்கில் 1136 கொலைகள்

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கடந்த வருடத்தில் மட்டும் 1136 கொலைகள் நடந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் தலைமையகத்தின் புள்ளிவிபரப் பகுதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் மேலும் 1992 ஆம் ஆண்டில் இத்தொகை 1168 ஆக இருந்ததாகவும், கடந்த ஆண்டில் கொலைகளை விட 1435 கொள்ளைச் சம்பவங்களும், 3868 திருட்டு சம்பவங்களும் இடம் பெற்றிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(யாழ்ப்பாணம்)

மலேரியா நோய்க்கிலக்காகி யாழ் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த இருபாலையை சேர்ந்த கிர்சினி கருணாநிதி (வயது5) எனும் சிறுமி நேற்று மரணமடைந்தார்.

அண்மைக்காலத்தில் மலேரியா நோய்க்கு பலர் இலக்கானதும் மலத்தியோன் இன்மையே இதற்குக் காரணம் எனசெய்திகள் வெளிவந்ததும் தெரிந்ததே.

## கப்பல்கள் வருகையில் தொடர்ந்து தாமதம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக்கான உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களுடன் கொழும்பிலிருந்து வரும் என அறிவிக்கப்படும் கப்பல்கள் தொடர்ந்து தாமதமடைகின்றன.

கடந்த 17 ஆம் திகதி அங்கிருந்து புறப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்ட வாதுவ கப்பல் வரும் 24 ஆம் திகதியும் இரண்டாயிரம் மெற்றிக் தொன் மா, 1000 மெற்றிக் தொன் சீனி மற்றும் அத்தியாவசிய பொருள்களுடன் கோமாரி கப்பல் வரும் 27ஆம் திகதியும் அங்கிருந்து புறப்பட உள்ளதாக தெரியவருகின்றது. (சி) (ச)

## பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் சடலமாக மீட்பு

பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொலைசெய்யப்பட்ட நிலையில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். வெலிக்கடை குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் அவரது கடுவெலவில் உள்ள வீட்டின் அறைக்குள் கொலைசெய்யப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். இவரது கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

## வடபகுதிக்கு உடன்பணம்செலுத்தினாலே உரம் கிடைக்கும்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் கடன் நிலுவையுள்ள திணைக்களங்களுக்கு உரவகைகளை வழங்க உரக்கூட்டுத்தாபனம் அனுமதி மறுத்து வருகிறது. இம்மாவட்டத்தில் உரம் தேவைப்படும் திணைக்களங்கள் உடன் பணம் செலுத்தியே பெறவேண்டும்.

உடன் பணம் செலுத்தும் திணைக்களங்களுக்கு உரவகைகளை வழங்க கூட்டுத்தாபனம் அனுமதி வழங்குகிறது. கொழும்பிலும் அமோனியா போன்ற உரவகைகளுக்கு தட்டுப்பாடு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் கமநலசேவைத் திணைக்களத்திற்கு மேலும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## இலவச பாலர் பாடசாலை

பாலர் கல்விக்கழகத்தால் 27-1-94 தைப்பூசத் தன்று 179, பிறவுண் வீதியில் 24 சைவப் பாலர்களுக்கு இலவச பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது; விண்ணப்பப் பத்திரங்களை 24-ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். (சி-8430)

## கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன் (HY - LINE) பிறவுண் வெள்ளைபேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. கோழிக் குஞ்சுகள் ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். மொத்தமாக எடுப்பவர்களுக்கு விலை 50/- ரூபா மட்டுமே. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7272)

## மூக்குக்கண்ணாடி

உங்கள் கண்களுக்கும், முகங்களுக்கும் ஏற்ற டாக்டர்களின் மருந்துச் சிட்டைக்கமைய, மூக்குக்கண்ணாடிகளை தாமதம் எதுவுமில்லாமல் பெற்றுக் கொள்ள நாடுங்கள் முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இன்றும்- மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (சி-8274)

## ஏகாதசி தீர்த்தம்

(குருநகர்)

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை 23-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி தீர்த்தம் சிறப்பாக நடைபெறும். (21)

## விற்பனையாகிறது

THEASTROLOGICAL MAGAZINE 1994ANNUAL NUMBER விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி 8406)

## செயன்முறை கருத்தரங்கு

இவ் வருட தமிழ் மொழி, கலைத்திறன் போட்டிகளுக்காக யாழ்ப்பாணம் வலயம் இரண்டு பாடசாலைகளில் சிறுவர் நாடகத்தைத் தயாரிக்க ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கான கருத்தரங்குத் தொடரில் முதல் செயன்முறைக் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிமுதல் பி. ப. 4. 30 மணிவரை யா-இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். இக்கருத்தரங்கில் உடுவில்- தெல்லிப்பழை கல்விக் கோட்ட ஆசிரியர்கள் பங்கு பற்றுவார்கள்.

---

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்- வரைவுள்ளது

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

| பதவி | சம்பள அளவுத் திட்டம் | வயது எல்லை |
|---|---|---|
| 1 ஆவது- இளை முகாமையாளர் | 208—11 ஆவது 805—1260 / 25 X 7, 35 X 8 | 18 - 40 |
| | (இத்துடன் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும்) | |
| 2 ஆவது— தட்டெழுத்தாளர் (தமிழ், ஆங்கிலம்) | 305—11ஆவது 805—1260 / 25X7, 35X8 | 18—40 |
| | (இத்துடன் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும்) | |

(அ) விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் முடிவுத் திகதி— 02.02.1994

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு திகதி— 05.02.1994

சங்கப்பணியாளர்களும், சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெறப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும், மேலதிக விபரங்கட்கு 291, ஸ்ரான்லி வீதியில் இருக்கும் எமது தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

பதில் பொது முகாமையாளர்.

அனுப்ப வேண்டிய முகவரி—

பொது முகாமையாளர்
யாழ். ப. நோ. கூ. சங்கம்- வ.து.,
291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-8433) 21-01-94

---

குருநகர் வர்த்தகர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்ட அழைப்பு

காலம்: 23.01.94 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.00 மணி

இடம்: காரியாலய பணிமனை

நடப்பு வருட புதிய நிர்வாகசபை இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட இருப்பதால் அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்திற்கு தவறாமல் வருகை தருமாறு வேண்டுகிறோம்.

தலைவர் — மி. யேசுதாசன் (சி-8436) செயலாளர் — க. சி. கிருஷ்ணன்

## அச்சகம் விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டு இருக்கும் அச்சகம் விற்பனைக்குண்டு.

விளம்பர இல. 307,
மே/பா ஈழநாதம்
31 ,மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(5085)

## வைத்தியர் தேவை

யாழ்நகரின் மத்தியில் இயங்க இருக்கும் வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு (CLINIC) குழந்தை வைத்தியத்தில் அனுபவம் மிக்க வைத்தியர் (M. B. B S.) முழு நேரமாகவோ பகுதிநேரமாகவோ கடமையாற்றத் தேவை. ஓய்வு பெற்றோர், இடம்பெயர்ந்தோர் விரும்பத்தக்கது 31-01-1994க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 308
மே/பா ஈழநாதம்
31. மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8432)

---

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்

## சங்காபிஷேகம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலில் வழமையாக நாட்டு நலன் கருதி ஊர்ப் பொறுப்பாக நடாத்தப்படும் சங்காபிஷேகம் எதிர் வரும் 24-01-94 திங்கட்கிழமை வருதலால் இம் முறையும் வழமை போல் சிறப்பாக நடாத்தப்படும். வினாயக அடியார்கள் அதற்கு வேண்டிய பண உதவி, பொருள் உதவி செய்ய விரும்புவோர் காரியாலயத்தில் கொடுத்து பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றனர்.

முக்கிய குறிப்பு

---

## 22-01-94 மங்களகரமான ஆரம்பம்

அருள் இரும்புத் தொழிற்சாலை

மின்சார ஒட்டுவேலைகள்,
இரும்பு, தகர வேலைகள் உடனுக்குடன்
எந்நேரத்திலும் தொழில் நுட்பத்துடன்
செய்து கொள்ளவும்

"பற்றி சார்ச்" திறமையாக
செய்து கொள்ளவும் நாடுங்கள்

**அருள் இரும்புத் தொழிற்சாலை**

மானிப்பாய் வீதி - உடுவில்

காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை இயங்கும். (7282)

## இந்துவின் இதய அஞ்சலி

எமது பௌதிகவியல் ஆசிரியர் திரு. சொ. சோதிலிங்கம் அவர்களின் பாசமிகு தந்தையாரான அமரர் ச. சொக்கலிங்கம் அவர்களின் மரணம் குறித்து அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

13A கணிதப்பிரிவு மாணவர்கள்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(7296)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
3-8-1922

உதிர்வு
23-12-1993



## திருமதி கதிரவேலு சொர்ணம்மா

அன்பின் தாயே ஆலமரமாய் எமைக்காத்து அன்பாக வழி நடத்திய நீங்கள் எமைவிட்டு பிரிந்து மாதமொன்று சென்றாலும் அன்பு முகம் மறக்க முடியவில்லை, அழியாத நினைவலைகள் ஆட்டிப் படைக்கிறதே. அன்போடு எமை அரவணைத்த அம்மா இனி என்று உன் முகம் காண்போம்? பார்ப்பதற்கு பலதிருக்க பாதியிலே விட்டுவிட்டு நாம் நினையா நாளிலே எமைவிட்டே மறைந்தனையோ? நீங்கள் இம்மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றாலும் எங்கள் நெஞ்சங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டு

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்

03 - 11 - 1940



மறைவு

23 - 12 - 1993

## அமரர் செல்லையா நடராசா (சின்னக்கிளி)

கோண்டாவில் கிழக்கு

திதி: 22.1.1994

அன்பான தந்தையே! பாசமிகு பிதாவே!
ஆலமரம் போல நிழல் தந்தீரே
காலனுமைக் கவர்ந்து சென்றானே
கலங்குகிறோம் உமது பிரிவால்
மண்ணில் மாண்டவர் மீள்வதில்லை.

விநாயகனை வேண்டுகிறோம். உமது ஆத்ம சாந்திக்கு!

இராமநாதன் ஒழுங்கை,
இருபாலை வீதி,
கோப்பாய் தெற்கு.

(7288)

உன் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

---

## முக்கிய குறிப்பு

பொதுச் சபைக் கூட்டம் மாசி மாதம் நடக்க இருப்பதால் உபயகாரர் அனைவரும், அங்கத்துவப் பணம் பத்து ரூபாவைச் செலுத்தி உங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றனர்.

- தர்மகர்த்தாக்கள் சபை

(7284)

---

## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

## அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு

19-01-1994 புதன்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட பரிசுச் சீட்டுக்களின் இலக்கங்கள்:-

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு:- | 13268 | – ரூபா 25000/- |
| இரண்டாம் பரிசு:- | 7448 | – ரூபா 15000/- |
| மூன்றாம் பரிசு:- | 11403 | – ரூபா 10000/- |
| ஆறுதல் பரிசுகள்:- | தலா | ரூபா 1000/- |

| | |
|---|---|
| 39238 | 25450 |
| 15758 | 6312 |
| 26067 | 3711 |
| 39434 | 28023 |
| 28303 | 9832 |

இச் சீட்டிழுப்பின்போது இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஒலி, ஒளி அமைப்புக்கள், வீடியோ, புகைப்படம், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றுக்கான செலவுகளை அன்பளிப்பாக தந்து உதவிய எங்கள் பிரதேச வர்த்தகப் பெருமக்களுக்கும் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்காக நடாத்துவதற்கு ஒத்துழைத்த பொதுமக்களுக்கும் எங்கள் நெஞ்சில் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சு. தனபாலசிங்கம்
செயலாளர்,
நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்.

என். கே. குலசிங்கம்
தலைவர்,
நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்.

(8428)

---

நாளிலே எமைவிட்டே மறைந்தனையோ? நீங்கள் இம்மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றாலும் எங்கள் நெஞ்சங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

முகவரி:
வேலணை மேற்கு,
ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(7285)

தகவல்:
கோ. காண்டீபன்

---

## நினைவு கூருகின்றோம்...

## 1994-01-22

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தவராசா** ( ——————— )

கிளி - ஆனையிறவுப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**தங்கராசா** (ஆறுமுகம் அருமைநாயகம் - முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**நியூட்டன்** (கந்தையா பூபாலசிங்கம் - செட்டிக்குளம் - வவுனியா)

திருகோணமலை - தம்பலகமம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் தயான்** (தியாகராசா கதிர்காமத்தம்பி - 3-ம் வட்டாரம், கிண்ணியா - திருகோணமலை)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலை, கறுவங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்,

யாழ் - வல்வெட்டித்துறைப் பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு - முருகுப்பிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8429)

சிந்தனைக்கு

அனுபவம் விவேகத்திற்கு நண்பனாய் இருந்தால் சிறந்த நண்பனாய் அமையும். இல்லாவிடின் விவேகத்திற்கு பகைவனாய் அமையும்.

—எட்வேர்ட் யங்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


# போருக்கு புதிய தளபதி தயாராகின்றார்!

புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா சுறுசுறுப்பாக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தொடர்ந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. படையணிகளைச் சீரமைத்தல், பயிற்சி வழங்கல், புதிதாக ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல், ஆயுதக் கொள்வனவு என்பனவற்றில் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் இராணுவ கட்டமைப்பிலும், அதிகாரிகள் மட்டத்திலும் பல மாற்றங்களைச் செய்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. அதாவது போருக்கு இராணுவத்தை முடுக்கி விடும் செயலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் எனலாம்.

இதற்கு அடுத்த கட்டமாக வடபகுதியில் பாரிய தாக்குதல்களை நடத்த இராணுவ திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. யுத்தத்திற்கான உபாயங்களும் விடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து இராணுவத்தளபதி ஜெரிடி சில்வா பகிரங்கமாகவே அறிவித்துள்ளார். தாக்குதலுக்குப் பயிற்சி பெறும் இராணுவத்தினர் வெளிவரும் வரையிலும் வெளிநாட்டில் இருந்து ஆயுதங்கள் வந்து சேரும் அளவிலும் இராணுவத் தலைமை காத்திருப்பதாகத் தெரிகின்றது.

இதேவேளை இராணுவத்தளபதி ஜெரிடிசில்வா விடுக்கும் அறிக்கைகள்/பேட்டிகள் என்பனவற்றில் அவர் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகும், அதுவே முடிந்த முடிவு என்ற ரீதியிலும் பேசி வருகின்றார். ஜெரிடி சில்வாவின் இப்பேச்சானது அவர் உண்மையிலேயே இராணுவத்தீர்வு காணப்பட முடியும் என்று நம்புகின்றாரா? அல்லது அவருக்கு பதவிக்கால நீடிப்பும், பதவி உயர்வும் வழங்கிய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் விருப்பத்தைப் பிரதிபலிக்கின்றாரா என்று கூறமுடியாது.

இதில் இராணுவத்தீர்வை அவர் முழுமையாக நம்புவதாக இருந்தால் கடந்த கால வரலாற்றையும் உலகின் வரலாற்றையும் அறியாதவர் அனுபவங்களைப்புறக்கணிப்பவர் என்றே கூறவேண்டும். அவ்வாறு இல்லை ஜனாதிபதியின் விருப்பத்தைப் பிரதிபலிப்பதாக இருப்பின் இப்பேச்சுகள்

முறைசாரார்க் கல்விப் பிரிவு

# தொழில்நுட்ப ஆசிரியர் கைநூல்கள் வந்தன

(நமது நிருபர்)

முறைசாராக் கல்விப் பிரிவின் தொழில் நுட்ப கல்விக்கான ஆசிரியர் கைநூல்கள் வந்துசேர்ந்துள்ளன

மேற்படி பயிற்சிநெறி குடா நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்களின் பின்பே தற்போது ஆறு பாடங்களுக்கான கைநூல் மட்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 16 பாடசாலைகளில் 25 பயிற்சிநெறிகள் நடைபெறுகின்ற போதிலும் ஆறு பயிற்சிநெறிகளுக்கான ஆசிரியர் கைநூல்களே அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்டடக் கலை நுட்பம், வீட்டு மின்கம்பி இணைப்பு, மின்வில்லும் வாயு பற்றாசு பிடித்தலும், ஆண் உடை தைத்தல், அதிவேக தையற் பொறிப் பயிற்சி, குளிரூட்டி திருத்துதலும் காற்றுச் சீராக்கலும் ஆசியபயிற்சிநெறிகளுக்கான கைநூல்களே எடுத்து வரப்பட்டுள்ளன. இவை விரைவில் மேற்படி போதனாசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச, சி)

## துலங்கல் சஞ்சிகை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிலாளர் கல்விக் கழகத்தின் துலங்கல் 111 சஞ்சிகை வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு பூர்த்தி செய்யப்படவில்லை

-ரோஹான் குணரத்தினா

(கொழும்பு)

''வடக்கு, கிழக்கு மக்கள் தாம் எதிர்பார்த்த உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை'' இவ்வாறு பிரபல சிங்களப்பத்திரிகையாளரான ரோஹான்குணரத்தினா சிலுமின பத்திரிகைக்குக் கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில் பண்டா-செல்வா டட்லி- சல்வா ஒப்பந்தங்கள் மூலம் வடக்கு கிழக்கு மக்கள் தமது உரிமைகளைப் பெறும் பொருட்டு பெரும் எதிர்பார்ப்புகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்தினர். ஆனால் அந்த எதிர்பார்ப்புகள் பூர்த்தியாக்கப்படவில்லை. சிறுபான்மை இனமாக இருந்தமையால் அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. அவர்களுக்கு பல பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. இவைகள் பற்றி நாம் தெளிவாக ஆராய்ந்தே வடக்கு கிழக்கு பிரச்சினை பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# யாழ். ஆஸ்பத்திரியில் நூல்நிலைய வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் பொதுமக்களின்வசதி கருதி நூலக வசதி செய்யப்படவுள்ளது

பொதுமக்களுக்கான மேற்படி நூலக வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் யாழ். மாவட்ட றோட்றிக் கழகம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது வெளி நோயாளர் பகுதியில் காணப்படும் நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு அண்மையில் மேற்படி நூலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்விடயம் தொடர்பாக யாழ் போதனா மருத்துவமனை நிர்வாகத்துக்கும் றோட்றிக் கழகத்துக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க)

# தமிழர்களுக்கு கொடுமை இழைப்பதில் காமினிக்கு பெரும் பங்குண்டு

- எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

''காமினி திசாநாயக்காவை மத்திய மாகாண முதலமைச்சராக்குவதற்கு எடுத்த தீர்மானத்தை மாற்றும்படியும், காமினிதிசாநாயக்கா தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகள் பற்றியும் தலைவருக்கு நான் எடுத்துரைத்தேன்.'' இவ்வாறு இ. தொ. கா. பொதுச் செயலாளரும் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பிடிக்காத ஒருவரிடமிருந்து ஒதுங்குவதற்காக எமது சமூகத்திற்கே துரோகமிழைத்த ஒருவருடன் கூட்டுச்சேர்வதா எனவும் கேள்வி எழுப்பினார். அத்துடன் மத்திய மாகாண சபை உறுப்பினர் எட்டுப் பேரும் ஐ. தே. கவை ஆதரித்தமைக்காக துரோகிகள் என அழைக்கப்படுவது சரியல்ல. இந்தப் பிரச்சினை ஒரு மேல்மட்டப் பிரச்சினை எனவும் தெரிவித்தார்.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபையினர் வீதிகளில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (யோ)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பயிற்சி மாணவ ஒன்றிய வளர்ச்சிக்காக எதிர்வரும் 19-02-94, 20-02-94 ஆகிய தினங்களில் யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான மாபெரும் இரண்டு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

## தபால்களை சேர்ப்பிக்கவும்

யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்கு உட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பகுதிகளுக்கு கடிதம் அனுப்புவதற்கான ஒழுங்குகளை யாழ்ப்பாண பிரதம அஞ்சல் அதிபர் மேற்கொண்டுள்ளார். எதிர்வரும் திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கு முன்பாக யாழ். பிரதம தபாற் கந்தோர் தபால் பெட்டிக்கு சேர்ப்பிக்கப்படும் கடிதங்கள் எடுத்துச் செல்லப்படும் என்று பிரதம தபால் அதிபர் அறிவித்துள்ளார்.

# சந்தித்துப் பேசுவதற்கு முன் அனுமதி வேண்டும்

கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளரைச்சந்திக்கவிரும்புவோர் முன் அனுமதி பெற்றே சந்திக்க முடியும் என அதன் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் புதன் கிழமைகளில் 1. 30 மணிக்குப்பின்னரும், பொது மக்கள் வெள்ளிக் கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் 12-30 மணிவரையும் சந்திக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்தல் தொடர்பாக அந்தந்தக் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (பா) (ச)

# புனித சவேரியார் ஆலய நூற்றாண்டுமலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சங்கானை புதிய சவேரியார் ஆலய நூற்றாண்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமையன்று கொண்டாடப்பட வுள்ளது. இதற்கு முன்னோடியாக கடந்த 15-ம் திகதி முதல் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று வருவதுடன் நாளை மாலை நற்கருனை ஆராதனையும் நாளை மறுதினம் காலையில் யாழ்ப்பாண ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருநாள்பாடல்கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப் படவுள்ளது திருநாள் திருப்பலிகள், திருச்சொரூப பவனி என்பவற்றை அடுத்து நூற்றாண்டு விழா மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

# அடையாள அட்டை கிடைக்காதோர் கவனத்திற்கு

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை கிடைக்காது இருப்பின் அது தொடர்பான விபரங்களை அறிய விரும்புவோர், தாங்கள் அனுப்பிய விண்ணப்பத்தின் பற்றுச்சீட்டுக்களுடன் தத்தமது பகுதி பிரதேச செயலர்கள் யாழ். செயலகஆட்களைப் பதிவு செய்யும் அலுவலகத்திற்கு. மேற்படி விண்ணப்பத்தை அனுப்பி வைத்த திகதியையும் கொண்டுவரல் வேண்டும்.

அவ்வாறு கொண்டுவரும் பட்சத்தில் விண்ணப்பம் பற்றிய விபரங்களை தம்மால் வழங்க முடியும் என ஆட்களை பதிவு செய்யும் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ச, சி)

# 50,000 ரூபா பெறுமதியான மருந்து வகை கொள்வனவு

(தொல்புரம்)

சுழிபுரம் வலி மேற்கு பிரதேச சபையினால் நடாத் ... சாலைக்கு 10ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த மருந்து வகைகளும், சுழிபுரம் ...

என்றே கூறவேண்டும். அவ்வாறு இல்லை ஜனாதிபதியின் விருப்பத்தைப் பிரதிபலிப்பதாக இருப்பின் இப்பேச்சுகள் போலித்தனமானவையாக சிறிலங்கா அரசையும், சிங்கள மக்களையும் ஏமாற்றுபவையாக இருக்க வேண்டும்.

''இனப்பிரச்சினையை தீர்த்து சமாதானத்தைக் கொண்டுவர இராணுவத்தினாலேயே முடியும்'', ''இறுதி வெற்றி பெறப்படும் வரை யுத்தத்திற்கும் யுத்தத்திற்கான பயிற்சிக்குமே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்'' என்ற இராணுவத்தளபதியின் அறைகூவல்கள், புதிதாக இராணுவத் தலைமைப்பதவியை பொறுப்பேற்பவர்கள் கூறிக்கொள்பவைதான் கடந்த காலத்தில் இதுவே நடந்தது. முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னாவும்இவ்வாறே கூறினார். ஆனால் சிறிலங்காவின் 'புகழ் பூத்த தளபதிகள்' பலர் முயன்று தோற்றுப் போன விடயம் ஒன்றை புதிய இராணுவத் தளபதி மறந்து பேசுவது போல் உள்ளமைதான் ஆச்சரியத்திற்குரியதாகும்.

சிறிலங்கா இராணுவத்தின் தோல்விகள், பின்னடைவுகள் இராணுவத்தின் பலவீனத்தினால் எழுந்தவை என்பதைவிட புலிகளின் திறமையால் விளைந்தவையே ஆகும். முன்னாள் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ன ''ஆசியாவிலேயே சிறந்த தொழில் சார் திறனுள்ள இராணுவம்'' எனக் குறிப்பிட்டுள்ள இராணுவத்தை பலவீனமானது என எவ்வாறு கூறிவிட முடியும்?

இந்நிலையில் இராணுவம் கடந்த காலத்தில் சந்தித்த தோல்விகள் என்பது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உள்ள தார்மீக பலத்தினாலும், விடுதலைப்புலிகளின் ஆற்றலினாலுமே ஏற்பட்டவையாகும். ஆனால் கடந்த காலத்திலும் சரி, தற்பொழுதும் சரி சிங்கள அரசியல் வாதிகளும் சரி, இராணுவத்தளபதிகளும் சரி அதனைச் சரியாகக் கணிப்பீடு செய்ததாக இல்லை என்றே கூற முடியும். அவ்வாறு சரியான கணிப்பீடு செய்யப்பட்டிருக்குமானால் புதிய இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா, ''ஜனகபுரத்தாக்குதலில் புலிகள் ஒரு சில மணி நேரத்தில் முகாமைத் தாக்கி முடித்துவிட்டார்கள். ஆனால் பூநகரித் தாக்குதலின் போது அவர்கள் பலவீனம் அடைந்தமையால் முகாமைக் கைப்பற்ற 48 மணி நேரம் பிடித்தது'' எனக் கூறியிருக்கமாட்டார். இது இராணுவத்தளபதியின் தப்பான கணக்கு மட்டுமல்ல, தவறான தகவலும் ஆகும்.

ஆனால் புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவும் தனது தோல்வியை ஒப்புக்கொள்ளும் வரை போராடித்தான் ஆக வேண்டுமானால் தவிர்க்க முடியாததுதான், ஆனால் வரலாறு தந்த பாடத்தைக் கற்க மறப்பதுதான் விவேகமானதாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை,

# வாக்காளர் அ. அட்டை இன்றேல் அடுத்த ஆண்டில் தேர்தல் இல்லை

## இந்திய தலைமைத் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(டில்லி)

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் திகதிக்குப் பின்னர் வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிடின் எந்த ஒரு தேர்தலும் நடத்தப்பட மாட்டாது என்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் அறிவித்துள்ளார். புதுடில்லியில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது வாக்காளர் அடையாள அட்டை நாடு முழுவதும் படிப்படியாக அறிமுகப்படுத்தலாம் என்ற மத்திய அரசின் யோசனையையும் அவர் நிராகரித்துவிட்டார். வாக்காளர்களுக்கு அடையாள அட்டை விநியோகிக்கும் திட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படலாம் என்றும், தேர்தல் கமிசன் விதித்துள்ள கால எல்லைக்குள் இது சாத்தியமாகாது என்றும் புதுடில்லியில் நடந்த முதலமைச்சர்களின் மாநாடு தெரிவித்து இருந்தது தெரிந்ததே.

இதனிடையே தேர்தல் ஆணையகத்தின் சில விதிமுறைகளை திருத்துவது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றையும், தேர்தல் சின்னம் ஒதுக்கீடு பற்றிய திருத்த நகல் ஒன்றையும், தேர்தல் ஆணையகம் எல்லா தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அத்துடன், தேர்தல் நடத்தை நெறிகளை மீறும் அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் ரத்துச் செய்யப்படும் என்று தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் கூறி உள்ளார்.

தேர்தல் நடத்தை நெறிகளை மீறும் அரசியல் கட்சிகளின் அங்கீகாரம் ரத்துச் செய்யப்படும் அல்லது நிறுத்திவைக்கப்படும் என்றும் இதற்காக 1968ம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள்தொடர்பான உத்தரவு உரியவகையில்திருத்தப்படும் எனவும்அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கான சலுகை எதுவும் தேர்தல்அறிவிப்பு வெளியான பின்னர் மத்திய, மாநில அரசுகளால் அறிவிக்கப்படக்கூடாது என்றும் அவ்வுத்தரவு மீறப்பட்டால் வாக்குப்பதிவு நிறுத்தப்படும் என்றும்குறிப்பிட்டு இருக்கிறார்.

## ரஷ்யாவில் புதியதாக அமைச்சரவை அமைப்பு

(மாஸ்கோ)

ரஷ்யஅதிபர் பொறிஸ்யெல்ட்சின் புதிய அமைச்சரவை ஒன்றை அமைத்து இருக்கிறார். இந்த அரசாங்கத்தில் தீவிர சீர்திருத்த வாதிகள் பலரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. பல வாரங்களாக நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர் அனடோர்லி ருவாட்ஸ் என்னும் ஒரே ஒரு சீர்திருத்த வாதிமட்டுமே அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இதனிடையே ரூபிளின் மதிப்பு அமெரிக்கடாலருக்குஎதிராக மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. ரஷ்ய துணைப் பிரதமர் எகோவர் கைதரின் பதவி துறப்பை அடுத்து ரஷ்யாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது தெரிந்ததே.

மேலும் முன்னாள் துணை அதிபர் அலெக்சாண்டர் ருஷ்கோவிற்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தகுந்த ஆதாரமின்மை காரணமாக கைவிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அக்டோபரில் நடந்த கிளர்ச்சியில் ஈடுபட்டமைக்காக அலெக்சாண்டர் ருஷ்கோவ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா கடற்படையால் தமிழக மீனவர் கொலை

(சென்னை)

கடந்த ஞாயிறன்று புதுக்கோட்டைக் கடலில் தமிழக மீனவர் ஒருவர் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது குறித்து மத்திய அரசு சிறிலங்கா அரசுடன் பேச்சு நடத்தி இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முடிவு காணவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

சுழிபுரம் வலிமேற்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும் இலவச சித்த ஆயுர்வேத மருந்துச்சாலைகளுக்கு நடப்பு வருடத்தில் 50ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

சங்கானை உப அலுவலகத்தில் இயங்கும் மருந்துச்சாலைக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளும், வட்டுக்கோட்டை உப அலுவலகத்தின் மருந்துச் பெறுமதி வாய்ந்த மருந்து வகைகளும், சுழிபுரம் உப அலுவலகத்தின் மருந்துச் சாலைக்கு 25ஆயிரம் பெறுமதியுள்ள மருந்து வகைகளும் வலிமேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் பயனடைந்துள்ளதுடன், நோயாளர் வருகையும் மருந்துச்சாலைகளில் அதிகரித்து காணப்படுகின்றன. (41)

யாழ்ப்பாணக் கல்லூரியின்

## டெக்னீசியன் டிப்ளோமா திறந்த பல். கழகம் ஏற்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனத்தால் நடாத்தப்படும் மூன்று வருட டெக்னீசியன் டிப்ளோமா கற்கை நெறிக்கு திறந்த பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தினரால் நடாத்தப்படும் பாடநெறிகளின் முதல் இரு நிலைகளும் மூன்றாவது நிலையில் மூன்று பாடத்திட்டங்களும் பரீட்சையில் பாடவிதான விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

## சூதாட்ட விடுதிகள் மீண்டும் கொழும்பில்

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவினால் தடைசெய்யப்பட்ட கஸினோ என்ற சூதாட்டம் மீண்டும் கொழும்பு ஹோட்டல்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கஸினோ சூதாட்டம் நடைபெறும் இடங்களில் பணி செய்வதற்கும் பகிரங்கமாகவே விளம்பரப்படுத்தி வேலையாட்கள் திரட்டப்படுகின்றனர்.

இது பற்றிச்சுற்றுலா அமைச்சர் எஸ். தொண்டமான் கருத்துத் தெரிவிக்கையில், கஸினோ சூதாட்டத்துக்கு விதிக்கப்பட்ட தடை இன்று வரை நீக்கப்படவில்லை என்றார்.

கஸினோ சூதாட்ட நிலையங்களில் வேலை செய்பவர்களுக்கு சீருடை, உணவு, போக்குவரத்து வசதிகள், மருத்துவ உதவி ஆகியனவும் இலவசமாக வழங்கப்படுகின்றது தடையையும் மீறி பெரிய நட்சத்திர ஹோட்டல்களில் இச்சூதாட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

### சேவை நலம் பாராட்டு

(வடமராட்சி)

மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலையில் பணி புரிந்து ஓய்வுபெற்ற அதிபர் திரு ந சிவபாதசுந்தரம் அவர்களுக்கு திரு. வி. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் சேவை நலம் பாராட்டு வைபவம் ஒன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

# கருணாநிதிமுதற்தர சந்தர்ப்பவாதி கோபாலசாமி குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையில் தி.மு. கவின் கொள்கைநிலை யானது. சரியாக ஆய்வு செய்யாமல் இலங்கைக்கு இந்திய அமைதிப்படையை அனுப்பியதால் நமது இராணுவத்தினர் ஏராளமானோர் இறந்தனர். இதை தி. மு. க. கண்டித்தது. 1989இல் இந்தியப் படை இலங்கையிலிருந்து திரும்பியபோது அதை வரவேற்க நான் செல்லாமைக்கு இதுவே காரணம். இதை நான்இந்திய இராணுவத்தை அவமதித்ததாகக் கொள்ளக் கூடாது. இவ்வாறு தி. மு. க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

ராஜீவ் கொலை சம்பந்தமான ஜெயின் கமிஷன்முன்பாக கருணாநிதி சமர்ப்பித்த பிரமாணப்பத்திரிகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். ''கருணாநிதி முதற்தர சந்தர்ப்பவாதி என்பது மீண்டும் இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது'' என இது குறித்து கருத்து தெரிவித்த வை. கோபாலசாமி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்துகோபாலசாமி மேலும் கருத்து தெரிவிக்கையில்; இந்தியப்படை திரும்பியபோது அதை வரவேற்க அன்றைய முதலமைச்சர் கருணாநிதி செல்லவில்லை. இது குறித்து அப்போது சட்டப்பேரவையில்வினவப்பட்ட போது என் தமிழ்சாதியைச் சார்ந்த ஆயிரக்கணக்கானோரைகொன்றுவிட்டுவரும் படைக்கு வரவேற்பளிக்க நான் எப்படிப் போவேன் என்று அன்று கூறிய அதே கருணாநிதி இப்பொழுது ஜெயின் கமிஷன் முன் தாக்கல் செய்த மனுவில் ஆய்வு ஆயத்தம் செய்யாமல் இலங்கைக்கு இந்தியப்படையை அனுப்பியதால் எமது படையினர் ஏராளமானோர் இறந்தனர் அந்தக் கவலையினால் அமைதிப் படை திரும்பியபோது அதை நான் வரவேற்க செல்லவில்லை. அவமதிக்கும் நோக்கம் கிடையாது என்று கூறியிருக்கின்றார்.

ஆயத்தம், ஆய்வு என்றால் என்ன கருத்து. இன்னும் பல தமிழரைக் கொல்லவில்லை எனக் கூறுகிறாரோ என எண்ணத் தோன்றுகிறது. இப்படியான கருணாநிதியின் எண்ண மாற்றம் அவர் தமிழருக்கு துரோகம் செய்துவிட்டார் என்றே கருத வைக்கின்றதுஎனவும்வை. கோபாலசாமி கூறினார்.

# புலிகளால் அபாயம் வருமெனநினைக்கவில்லை

## தமிழக ஆளுநர் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக மத்திய அரசிடமிருந்து வந்த தகவலையடுத்தே எனது தஞ்சாவூர்ப் பயணம் ரத்தானது. ஆனால் என்னைப் பொறுத்தவரை புலிகளிடமிருந்து எந்த அபாயமும் இருப்பதாக நான் நினைக்கவில்லை என தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி தெரிவித்துள்ளார்.

தமிழக புலனாய்வுத்துறையின் கோரிக்கையை தொடர்ந்து கடந்த ஞாயிறன்று தமிழக ஆளுநர் தமது தஞ்சாவூர் விஜயத்தை திடீரென ரத்து செய்திருந்தார். ஆளுநர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என தகவல் கிடைத்ததாலேயே இவரின் விஜயம் ரத்து செய்யப்பட்டதாக தமிழக அரசு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பவேண்டாம்

## தமிழ்நாட்டில் ஊர்வலம்

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை பலவந்தமாக திருப்பி அனுப்ப வேண்டாம் என தமிழக அரசை வலியுறுத்தும் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 30 ஆம் திகதி மதுரையிலிருந்து மண்டபம் வரை நடத்த இலங்கை -இந்திய நட்புறவு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

அகதி முகாம்களில் நிலைமையை மோசமாக்கி அதன் மூலம் அகதிகளை வெளியேற்றுவதை எடுத்துக்காட்டுவதற்காக நடத்தப்படவுள்ள இந்த ஊர்வலத்திற்கு தமிழக பொலிஸ் அனுமதி மறுத்துள்ளது. இதை உயர் நீதிமன்றம் முன்னாள் நீதிபதியும் இக் கூட்டமைப்பின் காப்பாளருமான வி. ஆர். கிருஷ்ண ஐயர் கண்டித்துள்ளார். ஊர்வலத்திற்கு அனுமதி மறுத்தது அரசியல் சட்டத்தில் உள்ள நடமாட்ட சுதந்திரத்தை மீறுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார். அகதிகளை அந்த நாட்டுச் சூழல் சரியாக இல்லாத நிலையில் துரத்தாது பார்க்கவேண்டும் எனவும் அவர்கோரியுள்ளார்.

முதலமைச்சர்ஜெயலலிதா இலங்கை அகதிகளை விரைவாக முழுமையாக திருப்பியனுப்பவேண்டும் என பிரதமர் நரசிம்மராவிடம் தொடர்ந்து வலியுறுத்தப்போவதாகக் கூறியுள்ளார்.

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
O/L
ஆண்டு 10, 9

## தொழில் நுட்ப

அதிபர் அறிவித்துள்ளார்.

புதிய மாணவர்களுக்கான பகல் வகுப்பு இம் மாதம் 31 ஆம் திகதியும், மாலை நேர வகுப்பு அடுத்தமாதம் 5 ஆம்திகதி சனிக்கிழமையும், 2,3,4-ம் ஆண்டு மாணவர்களுக்கு, அடுத்த மாதம் முதலாம் திகதியும் ஆரம்பமாகும்

## கண்டெடுப்பு

மாணவர்உதவிப்பண விண்ணப்பப்படிவம் ஒன்றுவீதியில் தவறவிடப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெறவும்.

## யாழ்.

வெற்றிடங்கள் உள்ளன.

மேலும் விசேட பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் 212 உள்ளன. இதில் சங்கீதம் 44, நடனம் 63, மனையியல் 29-ம் அடங்கும்.

# வறுமை கோட்டின்கீழுள்ள மாணவருக்கு முத்திரை

(நமது நிருபர்)

மாணவ உணவு முத்திரைகளுக்கு பதிலாக விசேட மாணவ உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி மாணவர் உணவு முத்திரைத் திட்டம் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டது தெரிந்ததே. தற்போது இதற்குப் பதிலாக விசேட மாணவ உணவு முத்திரைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் இது 93 ஒக்டோபரில் இருந்து அமுலாகும் எனவும் சமூகசேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்வறுமை நிவாரணம் பெறுகின்ற தொழில் இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து முதல் எட்டு வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கே இவ்விசேட மாணவ உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது. ஏனையோர் விசேட விண்ணப்பப் பத்திரம் ஒன்றில் விண்ணப்பிக்கலாம். இவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் யாழ் செயலக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களும் உணவுமுத்திரைகளும் அரசாங்க அதிபரால் விரைவில் எடுத்து வரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச, சி)

# நன்கொடைக்குப் பதில் பொருள்கள் வழங்கல்

வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபையைச் சார்ந்த சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைப்பணத்திற்குப் பதிலாக விளையாட்டு உபகரணங்கள், பெற்றோமாக்ஸ் போன்ற பாவனைப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பாவனைப் பொருள்கள் நாளை 23ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் மானிப்பாய் பட்டின பொதுநூலக மண்டபத்தில் பிரதேசசபையின் விசேட ஆணையாளர் திரு.கா.சந்திரராசா அவர்களால் வைபவ ரீதியாக கையளிக்கப்படவுள்ளன.

உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுவந்த சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப்பணம் வழங்குவதில் ஏற்பட்ட தடங்கலை அடுத்து தற்போது அப்பணத்திற்குப் பதிலாகப் பாவனைப் பொருள்களாக வழங்குவதென எடுத்துக் கொண்ட முடிவிற்கிணங்க மேற்படி பிரதேச சபையைச் சார்ந்த 60 சனசமூக நிலையங்களுக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பாவனைப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளிடம், ஒவ்வொரு நிலையத்திற்கும் 1500 ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்படவுள்ளதென பிரதேச சபையின் செயலாளர் திரு. இ. கணேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## கொடுப்பனவு

1993-ல் முறைசாராக்கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற பயிற்சிகளுக்குப் பொறுப்பான போதனாசிரியர், அதிபர்களுக்கான கொடுப்பனவுக் காசோலைகள் கல்வித்திணைக்களம் கணக்காளர் பிரிவில் உள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## உடன்

உரவகைகள் வரவுள்ளன இத்திணைக்களம் விண்ணப்பித்த உரவகைகளில் மேலும் குறித்த மெட்றிக் தொன் உரவகைகள் இன்னமும் வந்து சேரவில்லை. (யே
ா

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

21-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 341

வடபகுதிக்கு உள்ளே வந்தவாகன இலக்கங்கள்:

26-7217, 22-5812, 26-5351, 28-1706, 27-2761, 26-3638, 25-0525, 28-9449, 26-8051

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

## பிறந்தநாளில் நினைவு கூருகின்றோம்



மலர்வு: 22-01-1973

வீரச்சாவு: 11-11-1993

### கடற்கரும்புலி மேஜர் கணேஸ் (ஜீவநேசன்)

தாயக விடுதலைத் தாகம் எழுந்திட
பாயும் புலியாகிய மான மறவனே!
வையமிதில் நீ வந்துதித்த இந்நாளில் நினைந்து
உருகுகின்றோம், உன்னைத் தேடி!

இவருடன் வீரச்சாவெய்திய அனைத்து வீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

பா. நாகநாதி குடும்பத்தினர்
நவக்கிரி, புத்தூர்,
(7292)

தம்பித்துரை குடும்பத்தினர்
வீமன்காமம், தெல்லிப்பழை

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 30-12-1981

உதிர்வு 22-01-1993

### செல்வி கார்த்திகா பத்மநாதன்

## ஆரம்பமாகி விட்டன

- கணிதம்
  திரு. ல. சதீஸ்
  திரு. கிருபா
- விஞ்ஞானம்
  திரு. தயாநிதி
- தமிழ்
  திரு. பிரதிபன்
- ஆங்கிலம்
  திரு. கிரிதரன்
- வர்த்தகம்
  திரு. சத்தியபாலன்
- சமூகக்கல்வி
  திரு. கியூபேட்
- சைவசமயம்
  திரு. கிரி

(சி-8431)

லாம் திகதியும் ஆரம்பமாகும் என அவர் அறிவித்துள்ளார்.

(05)

தமிழக

னர். கடற்படையினரின் இத் தாக்குதல்எதிர்பாராத ஒன்று என சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

63, மனையியல் 29-ம் அடங்கும்.

இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை யாழ். குடாநாட்டில் கல்வியில் குறிப்பிட்ட ஓர் இலக்கை அடைய முடியாத நிலையே தொடரும் என கல்வி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன,

(ச, சி)

## விலை குறைப்பு

22-01-94 இன்று சனிக்கிழமை தொடக்கம் நாவாந்துறை சந்தை மாட்டிறைச்சிக் கடையில் 1 K. g. இறைச்சி ரூபாய் 80/- வீதம் விற்கப்படும்.

தகவல்:
நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை
உரிமையாளர்கள்

(7297)

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுகவருடம் தை 10ஆம் நாள் (23-01-1994) ஞாயிற்றுக்கிழமை பகல் 11-24 மணிமுதல் 12-36 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்,

எமது புதல்வன் திருநிறைச் செல்வன்
**நவநீதமணி B.A.**
உடுத்துறை மகாவித்தியாலயம்
(ஆசிரியர்) அவர்களுக்கும்

எமது புதல்வி திருநிறைச் செல்வி
**சயதா**
ஸ்ரீலங்கா வித்தியாசாலை
(ஆசிரியை) அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற திருவருள்கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புகூர அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திரு. வ. மாரிமுத்து (நடராசா)**
**திருமதி மா.நல்லம்மா**
மாறாம்புலம்,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

**திரு. க. தனபாலசிங்கம்**
(காப்புறுதி அமைப்பாளர்), (சோதிடர்)
திருமதி த. பரமேஸ்வரி
திரு. த. தனேஸ்வரன்B.A: (ஆசிரியர்)
திருமதி த. புஸ்ப்பலதா B.A: Hons(ஆசிரியை)
''சசிகை''
ஆலங்கட்டை, அல்வாய் வடக்கு, அல்வாய்.

உறவினர்கள், நண்பர்கள் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளவும்
(இரு வீட்டார் அழைப்பு)

(7283)

28-9449, 26-8051

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24-6941, 26-8138, 26-0547, 26-6983, 24-6538, 28-4550, 42-3815, 27-9772, 42-3339, 28-8367, 26-7949, 27-4070, 26-3146, 24-3262, 27-7627, 24-5015,

காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

## கிராமிய வங்கி மீதிகளை 31-8-93ல் உறுதிப்படுத்தல்

மேற்படி கிராமிய வங்கியில்

(1) சாதாரண சேமிப்பு
(2) நிலையானசேமிப்பு
(3) விசேட சேமிப்பு
(4) இளம் வயதினர் சேமிப்பு
(5) கடன் மீதிகள்

ஆகிய மீதிகளை உள்ள வாடிக்கையாளர்கள் தங்கள் புத்தக மீதிகளை கிராமிய வங்கி புத்தக மீதிகளுடன் சரிபார்ப்பதற்கு 24-1-94, 26-1-94 ஆகிய திகதிகளில் தலைமைக் காரியாலயத்திலும், 25-1-94ல் வழக்கம்பரையில் உள்ள தற்காலிக கிராமிய வங்கி காரியாலயத்திலும் சமுகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

374, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
21-1-94

பொதுமுகாமையாளர்
காரைநகர் ப. நோ. கூ.
சங்கம்.

(சி-8437)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன் (HY-LINE) பிறவுண் - வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. கோழிக்குஞ்சுகள் ஓடர்கொடுத்தவர்கள் உடன்வந்து பெற்றுக்கொள்ளவும் மொத்தமாக எடுப்பவர்களுக்கு விலை ரூபா 50/- மட்டுமே.

''மல்லிகாபதி''
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்

(7290)

## செல்வி கார்த்திகா பத்மநாதன்

(யா. இடைக்காடு மகாவித்தியாலய மாணவி)

காவியமாகி எங்கள் நெஞ்சிலே நிறைந்து விட்ட
கற்பூரதீபமே கார்த்திகா எம் கண்மணியே
கண்பட்ட மாயமோ காலன் லொறி வடிவில்
கவர்ந்துன்னைச் சென்றதனால் கதறித் துடிக்கின்றோம்
காணும் இடமெல்லாம் கார்த்திகா உம் பூ முகமே
கண்கள் துயின்றாலோ கனவில் உந்தன் செல்ல முகம்
கனவாக இருந்திருந்தால் நீ மடிந்த செய்தி
கார்மேகம் கண்டே களித்தாடும் மயிலாவோம்
கண்போன்ற கல்விதனைக் கற்றே உயர்ந்து நின்றாய்
கற்பித்த ஆசிரியர் மனங்களிலே நிறைந்து நின்றாய்
கல்வி கற்ற கல்லூரி உன்னால் பெருமை பெற
காலத்தால் அழியாத காவியமாய் நின்றாய் நீ
காலமது ஓராண்டு கழிந்தே சென்றாலும்
கண்ணீரில் ஆடுதம்மா கார்த்திகா உன் உருவம்

''அன்பகம்''
இடைக்காடு,
அச்சுவேலி.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்காமார்
மற்றும் உறவினர்கள்.

(சி-8434)

## மரண அறிவித்தல்

### திரு. முத்தையா சின்னையா

திரு. முத்தையா சின்னையா 23-08-93இல் கனடாவில் காலமானார். இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், வியாபாரிமூலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாரத்தினம் தம்பதிகளின் மருமகனும், சுண்டிக்குளியைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வருமாவார். இவர் முன்னாள் St. தோமஸ் குருத்தலாவல்ல, தென் ஆபிரிக்காவிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். தகனக் கிரியைகள் Torontoவில் நடைபெற்றது. உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Mrs. மங்கையர்க்கரசி சின்னையா

(7293)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது